செ.வெ.எண்.67 நாள்.23.10.2017.

திருநெல்வேலி மாநகராட்சி சிந்துபூந்துறை மற்றும் உடையார்பட்டி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் துப்புரவு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று அதிகாலையில் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

--------

திருநெல்வேலி மாநகராட்சி சிந்துபூந்துறை மற்றும் உடையார்பட்டி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் துப்புரவு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.10.2017) அதிகாலையில் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

சிந்துபூந்துறை மற்றும் உடையார்பட்டி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் மெகா துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து, வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என ஆய்வு செய்தார். டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களிடம் கொசு ஒழிப்பு பணிகளை தீவிரமாக பணியாற்ற வேண்டுமென உத்தரவிட்டார். மேலும், புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடங்களில் கொசு புழு உற்பதியாகிறதா என்பதையும், கொசு ஒழிப்பு புகை மருந்து அடிப்பதையும் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இப்பணிகள் மூன்று விதமாக பிரிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலாவதாக வீடு, வீடாக சென்று கொசு மருந்து அடித்தல், தண்ணீர் தொட்டிகளில் அபேட் மருந்து ஊற்றுதல், விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், இரண்டாவதாக பள்ளி, கல்லூரி, ஆலயங்கள் மற்றும் மக்கள் அதிகமாக கூடும் இடங்களை கண்டறிந்து டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளுதல், மூன்றாவதாக பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களை கொண்டு பொதுமக்களிடம் டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவற்றை மாவட்ட நிர்வாகம் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளில் தீவிரமாக செயல்படுத்தி வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் கண்காணிப்பாளர் திரு.ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் நாளை (24.10.2017) திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் துப்புரவு பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டம் மற்றும் கள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளவுள்ளார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் தூய்மை பணிகளை நாள்தோறும் அதிகாலை முதல் ஆய்வு செய்து வருகின்றனர். கொசு ஒழிப்பு பணிகளில் 2000 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு பல்வேறு பகுதிகளில் தீவிரமாக கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர் என தெரிவித்தார்.

ஆய்வின் போது, மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாநகர நல அலுவலர் மரு.பொற்செல்வன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.